அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு

## 2021/2022

# தமிழ்

## ஆண்டு 10

| | |
|---|---|
| **நேரம்: 150 மணித்துளிகள்**<br><br>**நாள்: 29.01.2022** | **மொத்தப்புள்ளிகள்: 80**<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)<br><br>**பக்கங்கள்: 16** |
| சுட்டெண்: | |

## பகுதி 1 – எழுதுதல்

**1. மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1 2 3 4

1. தமிழில் மொழிக்கு முதலில் வரும் எழுத்துகளின் எண்ணிக்கை
   1. பன்னிரண்டு
   2. பதினெட்டு
   3. இருபது
   4. நூறு

2. அரங்கு பற்றிய செய்திகளைக் கூறும் பழந்தமிழ் இலக்கியம்
   1. கலித்தொகை
   2. புறநானூறு
   3. மணிமேகலை
   4. நளவெண்பா

3. பக்தி இலக்கியங்கள் தோன்றிய காலத்தில் தமிழகத்தை ஆட்சி செய்தவர்கள்
   1. சோழர்
   2. பல்லவர்
   3. களப்பிரர்
   4. ஐரோப்பியர்

4. கவின் கலைகளுள் ஒன்று
   1. ஆடல்
   2. வனைதல்
   3. உருக்குதல்
   4. நெய்தல்

5. பாம்பின் வாழிடம்
   1. வளை
   2. குகை
   3. புற்று
   4. வலை

6. நிறவெறிக்கு எதிராகப் போராடியவர்களுள் ஒருவர்
   1. காரல் மார்க்சு
   2. பிடல் காசுரோ
   3. நெல்சன் மண்டேலா
   4. நெப்போலியன்

7. ஒலிப்பில் மயக்கம் தரும் எழுத்துத்தொகுதி
   1. ல ள ழ
   2. ந க ப
   3. ச த ட
   4. ந ம த

1 2 3 4

8. செயப்படுபொருள் குன்றாத வினைச்சொல்
   1. சிரித்தான்
   2. பிடித்தான்
   3. நின்றான்
   4. வந்தான்

9. காடுகள் அழிக்கப்படுதல் தடுக்கப்பட வேண்டும். இங்கு அழிக்கப்படுதல் என்பதன் எதிர்ப்பொருட்சொல்
   1. பெறப்படுதல்
   2. ஆக்கப்படுதல்
   3. கொடுக்கப்படுதல்
   4. நீக்கப்படுதல்

10. 'நடந்தனன்' என்னும் வினைமுற்றில் 'அன்' என்பது
   1. மாறுபாடு
   2. சந்தி
   3. சாரியை
   4. இடைநிலை

11. மாறன் சிறந்த பண்பாளன். இதில் பண்பாளன் என்பது
   1. தெரிநிலைவினை
   2. குறிப்புவினை
   3. தன்வினை
   4. எச்சவினை

12. தமிழிலுள்ள ஒப்பற்ற இலக்கண நூலாகத் திகழ்வது
   1. தொல்காப்பியம்
   2. இலக்கண விளக்கம்
   3. நேமிநாதம்
   4. வீரசோழியம்

13. தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதன எனக் கூறியவர்
   1. விபுலானந்தர்
   2. ஆறுமுகநாவலர்
   3. விவேகானந்தர்
   4. வள்ளலார்

14. அவன் பள்ளிக்குச் சென்றான். இச்சொல்லியத்திற்குப் பொருத்தமான இணைமொழி
   1. ஓட்டமும் நடையும்
   2. ஈடுஇணை
   3. ஏற்றஇறக்கம்
   4. வாழ்வும் வளமும்

1 2 3 4

15. செந்தமிழ் என்பதன் சொற்பிரிப்பு வடிவம்
   1. செந் + தமிழ்
   2. செ + தமிழ்
   3. செம்மை + தமிழ்
   4. செம் + தமிழ்

16. அஃறிணை, ஒன்றன்பால், ஒருமை, படர்க்கை, நிகழ்காலம் உணர்த்தும் சொல்
   1. ஓடுகின்றன
   2. ஓடுகிறான்
   3. ஓடுகிறது
   4. ஓடியது

17. பொதுமொழியாக வரும் சொல்
   1. தாமரை
   2. அரசன்
   3. வா
   4. யானை

18. கணகண, கமகம, சிலுசிலு ஆகிய இரட்டைக்கிளவிகள் வெளிப்படுத்துவது
   1. தோற்றம்
   2. இயக்கம்
   3. உணர்வு
   4. ஒலி

19. மாதவிக்கு ஆடல் திறனுக்குப் பரிசாகக் கொடுக்கப்பட்டது
   1. தலைக்கோல்
   2. பூமாலை
   3. முத்துமாலை
   4. செங்கோல்

20. கி.பி 9ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி 13ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் எழுச்சி பெற்ற அரசர்கள்
   1. சேரர்
   2. சோழர்
   3. பாண்டியர்
   4. நாயக்கர்

21. அரங்கு என்ற சொல்லுக்கு மாறாக இப்போது பெருவழக்காக உள்ள சொல்
   1. அமர்வு
   2. இருக்கை
   3. மேடை
   4. மன்றம்

1 2 3 4

22. உயிர்முன் உயிர் புணர்தலுக்கு எடுத்துக்காட்டு
   1. கடலலை
   2. மாவிலை
   3. கண்ணிமை
   4. பாற்சோறு

23. இடுகுறிப்பெயருக்கு எடுத்துக்காட்டு
   1. வாழை
   2. வானொலி
   3. பறவை
   4. வளையல்

24. மொழிபெயர்ப்பில் ஓர் எழுத்தாக்கம் எந்த மொழியில் ஆக்கப்பட்டதோ அம்மொழி
   1. மூலமொழி
   2. இலக்குமொழி
   3. செம்மொழி
   4. வாழிடமொழி

25. இவ்வாண்டு நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியில் இத்தாலி வெற்றிபெற்றது. இதில் வந்துள்ள ஆகுபெயர்
   1. பொருளாகுபெயர்
   2. இடவாகுபெயர்
   3. குணவாகுபெயர்
   4. தொழிலாகுபெயர்

(25×1=25 புள்ளிகள்)

**2. கீழ்க்காணும் வினாக்களுள் விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. தமிழகத்தில் சோழர் ஆட்சியின் சிறப்புகள் இரண்டு எழுதுக.

______________________________

______________________________

2. இல்லறம், துறவறம் என்பவற்றுள் ஒன்றை விளக்குக.

______________________________

______________________________

3. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் - இக்குறளின் பொருளை எழுதுக.

______________________________

______________________________

______________________________

4. பிரித்தானியர் ஆட்சியில் தமிழர் புலம்பெயர்ந்து சென்ற நாடுகள் நான்கு எழுதுக.

______________________________________________

______________________________________________

5. கபிலர் தனது நண்பன் பாரியின் புகழ் பற்றி செய்யுள் இயற்றினார். இதில் நண்பன், செய்யுள் என்பவை எந்த மெய்ம்மயக்க வகைகளைச் சார்ந்தவை?

______________________________________________

______________________________________________

6. மரபுத்தொடர்கள் இரண்டினைத்தந்து, அவற்றின் பொருள் விளங்க ஒவ்வோர் சொல்லியம் எழுதுக.

______________________________________________

______________________________________________

7. முதலெழுத்து வகைக்குள் அடங்கும் எழுத்து வகைகளையும் அவற்றின் எண்ணிக்கையையும் எழுதுக.

______________________________________________

______________________________________________

(5×2=10 புள்ளிகள்)

**3. கீழ்க்காணும் பாடலை வாசித்து, வினாக்களுக்கு விடை எழுதுக.**

கள்ளிக்கேன் முள்வேலி கழுதைக்கேன்
கடிவாளம் கறுப்பில் லாத
உள்ளிக்கேன் பரிமளங்கள் உவர்நிலத்துக் கேன்
விதைகள் ஒடிந்து போகும்
சுள்ளிக்கேன் கோடாலி துடைப்பத்திற் கேன்
கவசம் சும்மா போகும்
பள்ளிக்கேன் அதிவீர மழவரங்க
பூபதியெனும் பட்டந் தானே?

- இராமச்சந்திரக் கவிராயர்

1. இப்பாடலில் மேலோங்கியுள்ள உணர்வு யாது?

______________________________________________

2. “கறுப்பில்லாத உள்ளிக்கேன் பரிமளங்கள்” என்ற அடியின் பொருளை எழுதுக.

______________________________________________

3. இப்பாடலிலிருந்து பின்வருவனவற்றைத் தெரிவு செய்க.

வினையெச்சம்:____________________ பண்புப்பெயர்:____________________

(4×1=4 புள்ளி)

**4. கீழ்வருவனவற்றுள் ஒன்றினைத் தெரிவுசெய்து ஆறு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

1. விடுதலை

2. 

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

(4 புள்ளிகள்)

**5. கீழ்க்காணும் பந்தியை வாசித்து அதன் மூன்றிலொன்றாகச் சுருக்கி எழுதுக.**

பருவப்பெயர்ச்சிக் காற்று, மேற்காவுகை, சூறாவளி போன்ற இயற்கைக்காற்று வீசும்போது புவிக்கு மழை கிடைக்கிறது. இப்பருவ மழைக்காலங்கள் இனம் காணப்பட்டுள்ளபடி பெரும்போகம், சிறுபோகம் என வகுத்து பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகிறது. சில காலங்களில் மழைவீழ்ச்சி சீராக அமைவதில்லை. இதனால், மழையை நம்பிப் பயிர்ச்செய்கை செய்வோர் பெரும் இழப்புகளைச் சந்திக்கின்றார்கள். இதனைத் தவிர்த்துக் கொள்வதற்கு குறைந்த காலத்தில் விளைச்சல் தரக்கூடிய பயிரினங்கள், வறட்சி தாங்கக்கூடிய பயிரினங்கள் எனத் தேர்வுசெய்து பயிரிடுதல் சிறந்தது. சில காலங்களில் கூடிய மழைவீழ்ச்சி கிடைக்கின்றது. இக்காலங்களில் மழைநீரின் ஒருபகுதி கடலில் கலக்கின்றது. இந்நீரைத் தேக்கி வைக்க வேண்டியது இன்றியமையாத ஒன்றாகும். பண்டைக்காலத்தில் அணைக்கட்டுகள், குளங்கள் என்பனவற்றைக் கட்டி மழைநீரைப் பேணிப் பாதுகாத்தனர்.

(4 புள்ளிகள்)

**6. பின்வரும் பந்தியை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

கொண்டாட்டங்கள் ஒற்றுமையை வளர்க்கும் தன்மை உடையன; மக்களை மகிழ்வூட்ட வல்லன; புத்துணர்வைத் தரக்கூடியன. இத்தகைய கொண்டாட்டங்கள் இனக்கொண்டாட்டம், இறைநெறிக்கொண்டாட்டம், குடும்பக்கொண்டாட்டம் என மூவகைப்படும். இனக்கொண்டாட்டம் என்பது உலகில் வாழும் ஒவ்வோர் இனமும் தத்தமக்கெனக் காலங்காலமாகப் பின்பற்றிவரும் கொண்டாட்டமாகும். மக்கள் பின்பற்றும் இறைநெறி சார்ந்த கொண்டாட்டவகை இறைநெறிக்கொண்டாட்டமாகும். பிறந்தநாள், திருமண நிகழ்வு போன்றன குடும்பக்கொண்டாட்டங்கள் எனும் வகைக்குள் அடங்கும்.

(3 புள்ளிகள்)

7. **கீழ்வருவனவற்றுள் ஒன்றினைப்பற்றி 175 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. தமிழர் புலப்பெயர்வு
2. தமிழிலக்கிய வரலாற்றில் சோழர்காலம்
3. தாய்மொழிக்கல்வி
    - தாய்மொழிக்கல்வியின் தேவை
    - தாய்மொழிக்கல்விக்கான வழிகள்
    - தாய்மொழிக்கல்வியால் நீங்கள் அடையும் பயன்கள்

(15 புள்ளிகள்)

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. கீழ்க்காணும் பந்தியை வாசித்து, வினாக்களுக்கு விடை எழுதுக.**

தமிழ் மிகப் பழைமையான மொழி. தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டோர் தமிழர் ஆவர். தமிழர் தமது மொழியை மிக அருமையாகப் போற்றி வளர்த்தனர். தமிழை அரசர் ஆதரித்தனர். வள்ளல்கள் வழிவழியாகப் புரந்தனர். தமிழரசர்களாகிய மூவேந்தர்களில் பாண்டியர்களே பழைமையானவர்கள். இவர்களே சங்கம் வைத்துத் தமிழை வளர்த்தார்கள். முதன்முதலாகத் தோன்றிய சங்கம் முதற்சங்கம் எனப்படும். இச்சங்கம் குமரிக்கண்டத்திலிருந்த தென்மதுரை என்னும் நகரில் தோற்றுவிக்கப்பட்டது. இச்சங்கம் நாலாயிரத்து நானூற்று நாற்பதாண்டு காலம் இருந்தது. கடற்கோளால் இது அழிந்தது. இடைச்சங்கம் கபாடபுரத்தில் தோன்றியது. தலைமைப்புலவர் தொல்காப்பியர் என்பர். இச்சங்கம் மூவாயிரத்து எழுநூறு ஆண்டுகள் இருந்தது. இதுவும் கடலால் அழிய, இப்பொழுதுள்ள மதுரையில் மூன்றாம் சங்கமாகிய கடைச்சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. இதில் நக்கீரர் தலைமைப்புலவராக இருந்தார். இது ஆயிரத்து எண்ணூற்றைம்பதாண்டுகள் இருந்தது. இவ்வாறு பல்லாயிரம் ஆண்டுகளாகச் சங்கப்புலவர்களால் அமிழ்தம் போலப் பாதுகாக்கப்பட்டு வந்த தமிழ், இன்று தமிழர்கள் வாழும் நாடுகளிலும் தனக்கெனத் தனியிடத்தைப் பெற்றுவருகிறது.

1. மூவேந்தர்களில் பழைமையானவர்கள் யாவர்?

   ______________________________

2. இவர்கள் யாது செய்தனர்?

   ______________________________

3. முதற்சங்கம் எத்தனை ஆண்டுகள் இருந்தது?

   ______________________________

4. இடைச்சங்கத்துத் தலைமைப்புலவர் யார்?

   ______________________________

5. தமிழின் இன்றைய நிலை யாதெனக் கூறப்பட்டுள்ளது?

   ______________________________

   ______________________________

(5×2=10 புள்ளிகள்)

**3. கீறிட்ட இடங்களைப் பொருத்தமான சொற்களால் நிரப்பி விளம்பரத்தை நிறைவு செய்க.**

| | | |
|---|---|---|
| கூலங்கள் | நோய்த்தொற்று | கனடா |
| தாய்மண்ணின் | அங்காடி | |

**'ஈழம் பல்பொருள் அங்காடி'**

புலம்பெயர் நாட்டில் ____________________ மணம் மாறாத பொருள்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

ஈழம் பல்பொருள் ______________!

வாடிக்கையாளர்களின் பயன்கருதி நியூசிலாந்து, ____________ ஆகிய நாடுகளிலும் ஐரோப்பிய நாடுகளிலும் எங்கள் கிளைகள் திறக்கப்பட்டுள்ளன. இப்போது நடைமுறையில் இருக்கும் 'கோவிட் 19' _________________ப் பாதுகாப்புகளைக் கருத்தில் கொண்டு, உங்களுக்குத் தேவையான பொருள்களை வீட்டுக்கு கொண்டுவரும் நடைமுறையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தாயகத்தில் விளைவிக்கப்பட்ட காய்கறிகள், ____________________ ஆகியவற்றுடன் கடலுணவுகள், உலர் உணவுகள் போன்றவற்றையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: WWW.ELAM PALPORUL ANKADY. COM

செயலி (Apps): ஈழம் (eelam)

(5×1=5 புள்ளிகள்)